



# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

## மானியக் கோரிக்கை

## எண் - 52

## அறிவிப்புகள்

## 2024-2025

# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

## மானியக் கோரிக்கை

## எண் - 52

## அறிவிப்புகள்

## 2024-2025

## மு.க. ஸ்டாலின்

முதலமைச்சர்

**1. மாற்றுத்திறன் மாணவர்களின் சிறப்புக் கல்வியினை ஊக்குவிக்கும் பொருட்டு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை விரிவுபடுத்தி, ஆராய்ச்சி படிப்பு (Ph.D.,) மேற்கொள்ளும் மாற்றுத்திறன் மாணவர்களுக்கும் ஆண்டுதோறும் ரூ.1,00,000/-வீதம் 50 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 50.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் "முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகை திட்டம் (Chief Minister's Research Fellowship)" செயல்படுத்தப்படும்.**

மாற்றுத்திறன் மாணவர்களின் சிறப்புத் கல்வியினை ஊக்குவிக்கும் பொருட்டு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ஒன்றாம் வகுப்பு முதல் முதுகலை பட்டப்படிப்பு வரை பயிலும் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு ரூ.2,000/- முதல் ரூ. 14,000/- வரை ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தினை விரிவுபடுத்தி, ஆராய்ச்சி படிப்பு (Ph.D.,) மேற்கொள்ளும் மாற்றுத்திறன்

மாணவர்களுக்கும் ஆண்டுதோறும் ரூ.1,00,000/- வீதம் கல்வி உதவித்தொகை வழங்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகை திட்டம் (Chief Minister's Research Fellowship) என அழைக்கப்படும். 50 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 50.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



**2. செவித்திறன் மற்றும் பார்வைத் திறனால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல ஆர்வலரான திருமதி. ஹெலன் கெல்லர் அவர்களை இளம் தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் நோக்கில், உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று பார்வை மற்றும் செவித்திறன் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி அளிக்கும் சிறந்த ஆசிரியர்களுக்காக வழங்கப்படும் மாநில விருது இனி 'ஹெலன் கெல்லர் விருது' என அழைக்கப்படும்.**

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் சேவைகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு மாநில விருதுகளை வழங்கி வருகிறது, செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட சமூக ஆர்வலரான திருமதி. ஹெலன் கெல்லர் அவர்களை இளம் தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் நோக்கில் உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று பார்வை மற்றும் செவித்திறன் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு

கல்வி அளிக்கும் சிறந்த ஆசிரியர்களுக்காக வழங்கப்படும்மாநிலவிருதுஇனி'ஹெலன்கெல்லர் விருது' என அழைக்கப்படும். இவ்விருதுக்காக தெரிவு செய்யப்படும் சிறந்த ஆசிரியர்களுக்கு 10 கிராம் தங்கப்பதக்கமும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும்.



**3. மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவி தொகை ரூ.2,000/- 40 சதவீதத்திற்கு மேல் பாதிப்படைந்த புறஉலக சிந்தனையற்ற மதி இறுக்கமுடைய ( Autism Spectrum Disorder) 5,081 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் கூடுதலாக ரூ.12.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் விரிவுபடுத்தப்படும்.**

மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கில் அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, அறிவுசார் மாற்றுத்திறன், கடுமையாக உடல் பாதிப்படைந்தோர், முதுகுத்தண்டுவடம் / தண்டுவடம் மறப்பு மற்றும் பார்கின்சன் நோயால் மாற்றுத்திறன், தசைச்சிதைவு நோய் மாற்றுத்திறன் மற்றும் தொழுநோயால் பாதிப்படைந்தோர் ஆகிய மாற்றுத்திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவி தொகை மாதந்தோறும் ரூ.2,000/- வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, 40 சதவீதத்திற்கு மேல்

பாதிப்படைந்த புறஉலக சிந்தனையற்ற மதி இறுக்கமுடைய ( Autism Spectrum Disorder) 5,081 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்கென கூடுதலாக ரூ.12.20 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்படும்.



**4. செவித்திறன் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்காக செயல்படும் 10 அரசு சிறப்புப் பள்ளிகளில் பாடத்திட்டம் முழுவதையும் சைகை மொழியில் தயாரித்து எதிர்வினை குறியீடு (QR code) மூலம் அறிந்துகொள்ளும் வகையில் ரூ. 12.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் முதற்கட்டமாக முதல் வகுப்பு மாணவர்களுக்கு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.**

செவித்திறன் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்காக செயல்படும் 10 அரசு சிறப்புப் பள்ளிகளில் முதற்கட்டமாக முதல் வகுப்பு பாடத்திட்டம் முழுவதையும் சைகை மொழியில் தயாரித்து எதிர்வினை குறியீடு (QR code) மூலம் அறிந்துகொள்ளும் வகையில் பாடத்திட்டத்தினை சைகை மொழியில் தயாரிக்கவும், அதனை படிக்க உதவும் வகையில் ரூ. 12.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

5. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உணவூட்டு மானிய உதவித்தொகை ரூ.1,200/-லிருந்து ரூ.1,400/- ஆக உயர்த்தி 12,853 மாற்றுத்திறனாளி மாணாக்கர்கள்/ இல்லவாசிகள் பயன்பெறும் வகையில் ரூ.279.96 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் விரிவுபடுத்தப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ஊட்டச்சத்து உணவினை வழங்க மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் உணவூட்டு மானிய உதவித்தொகையானது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் உயர்த்தப்பட்டு வழங்குவதுபோல், ரூ.1,200/-லிருந்து ரூ.1,400/-ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படும். இத்திட்டம், தற்போது சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 7,128 மாணாக்கர்களுக்கு ரூ. 142.56 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டிலும் மற்றும்



மனவளர்ச்சி மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியிருக்கும் 5,725 இல்லவாசிகளுக்கு ரூ. 137.40 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டிலும் ஆகமொத்தம் 12,853 மாற்றுத்திறனாளி மாணாக்கர்கள்/இல்லவாசிகள் பயன்பெறும் வகையில் ரூ.279.96 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

**6. பார்வைத் திறன் குறைபாடுடைய அரசு பள்ளி மாணவ / மாணவியர்களின் கற்றல் திறனை மேம்படுத்த கற்பிக்கும் கருவிகள் மற்றும் தொட்டுணரக்கூடிய புத்தகங்கள் (Universal Braille Kit and Tactile Book) அடங்கிய பெட்டி ரூ.5,000/- முதல் ரூ. 10,000/-மதிப்பில் 430 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.34.50 செலவில் வழங்கப்படும்.**

பார்வைத் திறன் குறைபாடுடைய அரசு பள்ளி மாணவ / மாணவியர்களின் கற்கும் திறனை மேம்படுத்த 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு கற்பிக்கும் கருவிகள் மற்றும் தொட்டுணரக்கூடிய புத்தகங்கள் (Universal Braille Kit and Tactile Book) அடங்கிய பெட்டி ரூ.5,000/- மதிப்பில் 170 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.8.50 இலட்சம் செலவிலும், 6-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அறிவியல்,



கணிதம், வரலாறு மற்றும் புவியியல் வரைபட புத்தகங்கள் தொட்டுணரக்கூடிய வடிவில் ரூ. 10,000/- மதிப்பில் 260 மாணவ / மாணவிகளுக்கு ரூ.26.00 இலட்சம் செலவிலும் வழங்கப்படும். இத்திட்டத்தினால், ஆரம்ப பள்ளி மாணவர்களின் பிரெய்லி எழுது திறனை மேம்படுத்தவும் அனைத்து மாணவர்களும் கணிதம், அறிவியல், வரலாறு மற்றும் புவியியல் புத்தகங்களை தொடு உணர்வுடன் அறிந்து படிக்கும் திறன் மேம்படும்.

7. அரசு சிறப்புப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறன் மாணவர்கள், பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையங்களில் தங்கி பயிலும் பார்வை மாற்றுத்திறன் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் சீருடைக்கான மானியத் தொகை ரூ500/- முதல் ரூ.600/-க்கு உயர்த்தப்பட்டு 1154 மாற்றுத்திறன் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் ரூ.11.66 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

அரசு சிறப்புப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு வழங்கப்படும் சீருடைக்கான மானியத் தொகை ரூ.250/- லிருந்து ரூ.500/- ஆகவும், பூவிருந்தவல்லி பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு தொழிற்பிரிவு, அரசு பெண்கள் மறுவாழ்வு இல்லம் மற்றும் பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு



தொழிற்பயிற்சி மையங்களில் தங்கி பயிலும் பார்வை மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் சீருடைக்கான மானியத் தொகை ரூ.300/- லிருந்து ரூ.600/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். தற்போது, அரசு சிறப்புபள்ளிகளில் கல்வி பயிலும் 1097 மாற்றுத்திறன் மாணவர்களுக்கு ரூ10.97 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டிலும் மற்றும் பூவிருந்தவல்லி பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு தொழிற்பிரிவு, அரசு பெண்கள் மறுவாழ்வு இல்லம் மற்றும் பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையங்களில் தங்கி பயிலும் 57 பார்வைத்திறன் மாணாக்கர்களுக்கு ரூ.0.69 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டிலும் ஆகமொத்தம் 1154 மாற்றுத்திறனாளி மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் ரூ.11.66 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

8. அறிவுசார் குறைபாடு மற்றும் அறிவுசார் குறைபாடுடன் கூடிய மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட 1,000 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ரூ.1.00 கோடி மதிப்பில் நவீன இயன்முறை உபகரணம் (Standing Frame) வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகள் பிறருடைய உதவியின்றி எளிதாக நடமாடுவதற்கு தேவையான உதவி உபகரணங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், அறிவுசார் குறைபாடு மற்றும் அறிவுசார் குறைபாடுடன் கூடிய மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட 1,000 மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு ரூ.1.00 கோடி மதிப்பில் நவீன இயன்முறை உபகரணம் (Standing Frame) வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.



9. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத் தேர்வுகளை முதல் மூன்று முறை எழுதியும் தேர்ச்சி பெறாத 50 வயதினை கடந்த பார்வைத்திறன் பாதிப்பு, செவித்திறன் பாதிப்பு, கற்றல் குறைபாடு, அறிவுசார் குறைபாடு மற்றும் புற உலக சிந்தனையற்ற மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்களுக்கு மீண்டும் துறைத்தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

அரசு வேலைவாய்ப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான 4% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளில், பணிவரன்முறை மற்றும் பதவி உயர்வுக்காக, அந்தந்த பதவிகளுக்குரிய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத் தேர்வுகளை முதல் மூன்று முறை எழுதியும் தேர்ச்சி பெறாத 50 வயதினை கடந்த பார்வைத்திறன் பாதிப்பு,

செவித்திறன் பாதிப்பு, கற்றல் குறைபாடு, அறிவுசார் குறைபாடு மற்றும் புற உலக சிந்தனையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மீண்டும் துறைத்தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்படும்.



10. பத்து ஆண்டுகளுக்கு முன்பு மின்கலனால் இயங்கும் ஸ்கூட்டர்கள் மற்றும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் பெற்ற மாற்றுத்திறனாளிகளின் வாகனங்கள் பழுதடைந்து, அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் எண்ணிக்கையில் 25 சதவீதம் எண்ணிக்கை அளவிலான பழுதடைந்த வாகனங்களுக்கு பதிலாக புதிய இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படும்.

கால்கள் பாதிக்கப்பட்ட மாணவர்கள், பணிபுரியும் மற்றும்சுயதொழில்புரியும்மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் வாயிலாக தற்போது இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வழங்கப்பட்ட மின்கலனால் இயங்கும் ஸ்கூட்டர்கள் மற்றும் இணைப்புச் சக்கரங்கள்

பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் பத்து ஆண்டுகளுக்குமுன்புபெறப்பட்டு,அவ்வாகனங்கள் பழுது ஏற்பட்டிருப்பின் மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்கும்பட்சத்தில்,ஒவ்வொருவருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல்ஸ்கூட்டர்களின் எண்ணிக்கையில் 25 சதவீதம் அளவிலான எண்ணிக்கை பழுதடைந்த வாகனங்களுக்கு பதிலாக புதிய இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்படும்.



11. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு காதொலிக்கருவிகள் பெற்று, அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டிருப்பின் அந்த செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கு, அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக்கருவிகளின் எண்ணிக்கையில் 25 சதவீதம் அளவிலான எண்ணிக்கை பழுதடைந்த காதொலிக்கருவிகளுக்கு பதிலாக புதிய காதொலிக்கருவிகள் வழங்கப்படும்.

செவித்திறன் மாணவர்கள், பணிபுரியும் மற்றும் சுயதொழில் புரியும் செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் வாயிலாக காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக்கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வழங்கப்பட்ட காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக்கருவிகள்

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பெறப்பட்டு, அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக்கருவிகளின் எண்ணிக்கையில் 25 சதவீதம் அளவிலான எண்ணிக்கை பழுதடைந்த கருவிகளுக்கு பதிலாக புதிய காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக்கருவிகள் வழங்கப்படும்.



**12. பார்வை மாற்றுத்திறனாளிகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிரெயில் கைக்கடிகாரங்கள் பெற்று, அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டிருப்பின், அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பிரெயில் கைக்கடிகாரங்களின் எண்ணிக்கையில் 25 சதவீதம் அளவிலான எண்ணிக்கை பழுதடைந்த பிரெயில் கைக்கடிகாரங்களுக்கு பதிலாக புதிய பிரெயில் கைக்கடிகாரங்கள் வழங்கப்படும்.**

பார்வைத்திறன் மாணவர்கள், பணிபுரியும் மற்றும் சுயதொழில் புரியும் பார்வைத்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் வாயிலாக பிரெயில் கைக்கடிகாரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வழங்கப்பட்ட பிரெயில் கைகடிகாரங்கள்

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பெறப்பட்டு, அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டிருப்பின் அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பிரெயில் கைக்கடிகாரங்களின் எண்ணிக்கையில் 25 சதவீதம் அளவிலான எண்ணிக்கை பழுதடைந்த பிரெயில் கைக்கடிகாரங்களுக்கு பதிலாக புதிய பிரெயில் கைக்கடிகாரங்கள் வழங்கப்படும்.



**13. அரசு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் ஏனைய அரசு தேர்வாணையங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் மாற்றுத்திறனாளிகள் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்று வேலைவாய்ப்பு பெறும் வகையில், ஆண்டுதோறும் 200 மாற்றுத்திறனாளிகளுக்கு உணவு மற்றும் தங்கும் விடுதி வசதியுடன் கூடிய சிறப்பு பயிற்சி வகுப்புகள் முதற்கட்டமாக சென்னையில் துவங்கப்படும்.**

அரசின் பல்வேறு துறைகளில் மாற்றுத்திறனாளிகள் அதிகளவில் வேலைவாய்ப்பு பெறும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் ஏனைய அரசு தேர்வாணையங்களால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில்

மாற்றுத்திறனாளிகள் பங்குபெற்று, அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்று வேலைவாய்ப்பு பெறும் வகையில், ஆண்டுதோறும் 200 மாற்றுத்திறனாளிகளுக்கு உணவு மற்றும் தங்கும் விடுதி வசதியுடன் கூடிய சிறப்பு பயிற்சி வகுப்புகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் முதற்கட்டமாக சென்னையில் துவங்கப்படும்.

**மு.க. ஸ்டாலின்**
முதலமைச்சர்